From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 523 /2007

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : Gopi | Father/Husband Name | : Rajaguru |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 02.08.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் தற்போது கோயம்புத்தூரில் வசிக்கிறேன். வழக்கு சம்பவத்தின்போது நான் மதுரையில் வசித்தேன். சம்பவத்தின்போது நான் பழைய பாத்திரக்கடை நடத்தி வந்தேன். 24.07.07ம் தேதி மேலூர் காவல் நிலைய ஆய்வாளர் என் கடைக்கு வந்து பொருள் காணவில்லை என்பது சம்மந்தமாக என்னிடம் விசாரித்தனர். அதில் அலுமினிய பகுதிகள் மற்றும் பித்தளை மவுத்துகளை காணவில்லை என்ற புகாரின்பேரில் என்னிடம் விசாரித்தனர். மேலும் கல்யாணசுந்தரம் என்பவரை போலீசார் அழைத்து வந்திருந்தனர். நான் கல்யாணசுந்தரிடமிருந்து 500 கிலோ அலுமினிய கம்பிகளும், 200 கிலோ பித்தளை மவுத்துகளை வாங்கியதில் சுமார் 7 அல்லது 8 கம்பிகளை அப்படியே வைத்துவிட்டு, மீதமுள்ளதை உருக்கி சுமார் 95 கட்டிகளாக வைத்திருந்தேன். பித்தளை மவுத்துகளை உருக்கி 16 கட்டிகளாக வைத்திருந்தேன். மேற்படி பொருட்களை கல்யாணசுந்தரம் கம்பெணி வந்து ஏலம் எடுத்து கொண்டுவந்ததாக சொல்லிச்சென்றார். மேற்படி கம்பிகளையும், உருக்கிய கட்டிகளையும் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

குறுக்கு விசாரணை:

என்னுடைய பாத்திரக்கடை எந்த காவல் நிலைய எல்கைக்கு உட்பட்டது என்றால் விலக்குத்தூண். நான் இதேபோல் வேறு வழக்குகளிலும் சாட்சி சொல்லியுள்ளேன் என்றால் இல்லை, என்மீது

விலக்குதூண் காவல் நிலையத்தில் வழக்குகள் உள்ளது என்றால் இல்லை. லெட்சுமிபுரத்திலுள்ள சந்துகள் அனைத்திலும் பித்தளை மற்றும் அலுமினிய எவர்சில்வர் பாத்திரங்கள் விற்கப்படும் என்றால் சரிதான். நான் என்ன பாதர்திரங்கள் விற்பனை செய்தேன் என்றால் பழைய பொருட்கள் வாங்குவேன். என்னிடம் பொருட்களை கைப்பற்ற எந்த காவலர் வந்தார் என்றால் ஆய்வாளர் பாலாஜி வந்தார். அவர் எத்தனை மணி, எந்த வருடம், தேதிக்கு என்றால் 24.07.07ம் தேதி காலை 10.30 மணிக்கு வந்தார். அவர் என்னிடம் எந்தெந்த பாத்திரங்களை கைப்பற்றினார் என்றால் பாத்திரங்களை கைப்பற்றவில்லை சுமார் 500 கிலோ அலுமினிய கட்டிகளை கைப்பற்றினார். அப்பொழுது மற்ற கடைகாரர்கள் என் கடைக்கு வந்தார்கள் என்றால் சரிதான். எங்களுக்கென்று சங்கம் உள்ளது என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட தேதியில் ஒரு கிலோ அலுமினியம் விலை என்ன என்றால் ரூ.40 இருக்கும். அலுமினிய கட்டிகளை எதிரிகள் என்னிடம் விற்கவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் என்னிடம் பொருட்களை கைப்பற்ற வரும்போது பொருட்களின் சாம்பிள் எதையும் கொண்டுவந்தாரா என்றால் என்னிடமே உருக்காத 7, 8 கம்பிகள் இருந்தது. இந்த கம்பிகளை என்னிடமிருந்து கைப்பற்றி ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து என்னிடம் கையெழுத்து பெற்றாரா என்றால் நினைவில் இல்லை. கைப்பற்றப்பட்ட 500 கிலோ, அலுமினிய கட்டி மற்றும் 200 கிலோ பித்தளை கட்டி என்று எழுதி அத்தாட்சியில் ஆய்வாளர் என்னிடம் கையெழுத:து வாங்கினாரா என்றால் நினைவில் இல்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன தேதி, மாதம், விதத்தில் பொருட்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.4ல் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். என்னுடைய கடையில் கைப்பற்றப்பட்டிருந்தால் அத்தாட்சியில் என்னிடமும் கையெழுத்து பெற்றிருப்பார்கள் என்றால் அதுபற்றி தெரியவில்லை. எனக்கு மதுரை மாவட்ட அளவில் கிரைம் ஸ்குவார்டு இருப்பது தெரியுமா என்றால் தெரியும். நான் அந்த கிரைம் ஸ்குவார்டின் இருப்பு சாட்சி என்றால் சரியல்ல. நான் சொன்ன முகவரியில் எனக்கு கடை இருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என்னுயைட கடையில் எத்தனைபேர் வேலை செய்தார்கள் என்றால் யாரும் வேலை செய்யவில்லை. அங்கு நினறுகொண்டிருந்தவர்களிடமோ பக்கத்து கடைக்காரர்களிடமோ அத்தாட்சியில ்கையழுத்து வாங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. போலீசார் என்னுடைய கடைக்கு வரும்போது வேறு பித்தளை வயர்களோ, அலுமினிய வர்களோ கொண்டு வந்தார்களா என்றால் இல்லை. அலுமினியம் மற்றும் பித்தளை கட்டிகள் மார்க்கெட்டில் கிடைக்கும் என்றால்

சரிதான். போலீசார் 8-வது எதிரி கல்யாண சுந்தரத்தை அழைத்து வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் போலீசார் சொல்லிக்கொடுத்ததன்பேரில் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கட்டியை கைப்பற்றிய ஆய்வாளர் கட்டியிலிருந்து மாதிரிக்காக சிறிய துண்டு வெட்டி கேட்டார்களா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 523 /2007

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : Vairamuthu | Father/Husband Name | : Ramu |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 02.08.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கடந்த 2007 மற்றும் 2008ம் வருடங்களில் மதுரை கோவலம் நகரில் வசித்தேன். தற்போது மதுரை வேல்முருகன் நகரில் வசிக்கிறேன். வழக்கு நான் டி.வி.எஸ் ஸ்ரீசக்ரா கம்பெணியில் தரம் மேன்மாண்மை பிரிவில் பொதுமேலாளராக பணிபுரிகிறேன். கடந்த 23.07.07ம் தேதி எங்கள் நிறுவனத்தில் நாங்கள் பயன்படுத்தி வரும் பித்தளை மவுத்துகள் திருடுபோய்விட்டதால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து பின்னர் பொருட்கள் கிடைத்துவிட்டதாக போலீசார் அழைத்ததன்பேரில் 24.07.07ம் தேதி மேலூர் காவல் நிலையம் சென்று பொருட்களை பார்வையிட்டு அடையாளம் காண்பித்தேன். பொருட்கள் உருக்கிய நிலையில் 16 கட்டிகளாக ஒரு பையில் இருந்தது. மேற்படி பொருட்கள் எங்கள் நிறுவனத்தில் திருடுபோன பித்தளை பொருட்கள்தான் என்று அதன் அளவுகளை வைத்து நான் சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் சான்று அதுவாகும். அந்த சான்று அ.சா.ஆ.3 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை:

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.இ. மெக்கானிக்கல் படித்துள்ளேன். தடய அறிவியல் சம்மந்தமான விசேச படிப்புகள் இல்லை என்றால் சரிதான். என்னுடைய கம்பெணியில் குவாலிட்டி பிரிவு தனியாக உள்ளது என்றால் உள்ளது. அந்த குவாலிட்டி பிரிவில் நான் பொறியாளர் இல்லை என்றால் நான்தான் அந்த பிரிவின் தலைவர்,

அதற்கான அடையாள அட்டை என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. குறிப்பாக நான் தர நிர்ணயப்பிரிவில் தலைவர் என்பதற்கான அடையாள அட்டை உள்ளதா என்றால் உள்ளது. டி.வி.எஸ் ஈரோ கிரிப் என்பது டயர் மற்றம் டியூப் சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய கம்பெனியிலிருந்து டயர் மற்றும் டியூப் காணாமல் போனது மேலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எங்களுடைய கம்பெனியிலிருந்த பித்தளை மற்றும் அலுமினியம் காணாமல்போனதாக புகார் கொடுக்கப்பட்டுள்ளத என்றால் பித்தளை மட்டும்தான் காணாமல் போனதாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது. பித்தளை மவுத்துகளை எங்களது நிறுவனம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். பித்தளை மவுத்துகள் எந்த நிறுவனத்தில் தயாரிக்கப்படும் என்றுதெரியுமா என்றால் தெரியும், மைசூரிலுள்ள டிரைட்டன் வால்வு கம்பெணி. இந்த விவரத்தை காவல் ஆய்வாளரிடம் நான் சொன்னேனா என்றால் இல்லை. இந்த விவரத்தை காவல் ஆய்வாளரிடம் நான் சொன்னால் கைப்பற்றப்பட்ட கட்டிகள் எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமானது அல்ல என்று தெரிந்துவிடும் என்பதால் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த பித்தளை கட்டிகள் என்பதை யார் பார்த்தாலும் பித்தளை கட்டிகள் என்று சொல்லிவிடுவார்கள் அதற்கு விசேச படிப்புகள் தேவையில்லை என்றால் சரிதான். அறிவியல்பூர்வமாக காவல் ஆய்வாளர்கள் காட்டிய கட்டிகளை வைத்து அதன் அடர்த்தி, தடிமம் ஆகியவற்றை நான் ஆராய்ச்சி செய்து சான்று கொடுக்கவில்லை என்றால் சரிதான். மைசூர் நிறுவனத்திலிருந்து வாங்கிய பித்தளை மவுத்துகளின் மீதம் எங்கள் நிறவனத்தில் இருந்தா என்றால் இருந்தது, அதனை காவல் ஆய்வாளர் மாதிரிக்காக கைப்பற்றினாரா என்றால் இல்லை. இந்த சம்பவத்தை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் எங்களுடைய அலுவலக முத்திரையோ என் கையெழுத்தோ இருந்ததா என்றால் புகார் கொடுப்பது என் பிரிவிற்கான வேலை இல்லை என்பதால் அதில் என் கையெழுத்து இல்லை. அலுவலக முத்திரை இருந்ததா என்பது பற்றி எனக்கு தெரியாது. எத்தனை மவுத்துகள் வாங்கப்பட்டன, எத்தனை திருடப்பட்டன, அது சம்மந்தப்பட்ட ஸடாக் ரிஜிஸ்டரை ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் தெரியாது. அதை ஆய்வாளர் கைப்பற்றியிருந்தால் திருடப்பட்ட பொருட்களின் துள்ளியமான விவரம் தெரியவந்திருக்கும் என்றால் தெரிந்திருக்கும், தெரியாமலும் இருக்கலாம். சாதாரணமாக ஒரு மனிதனால் எவ்வளவு எடையை தூக்க முடியும் என்றால் 20 கிலோ தூக்கலாம். எங்களுடைய நிறுவனத்தில் எத்தனை கிலோ பித்தளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், 200

கிலோ. 200 கிலோதான் திருடுபோனது யார் என்னிடம் குறிப்பிட்டு கூறினார் என்றால் ஒரு அதிகாரி கூறினார், அவர் இன்று நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறாரா என்றால் இன்று வரவில்லை, நாட்கள் ஆனதால் அவர் யார் என்று தெரியாது. சாட்சி மீண்டும் குற்றப்பத்திரிக்கையை பார்த்துதான் தெரியும் என்று கூறுகிறார். எங்களுடைய நிறுவனத்தில் இந்த பிளத்தளை மவுத்துகள் திருடுபோனதாகசொல்வது பொய், அந்த நிறுவனத்திலுள்ள உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்போடு எங்கள் கம்பெணியில் வேலை பார்த்தவர்கள்தான் டயரை கடத்துவது, மவுத்தை கடத்துவது போன்ற வேலைகளை செய்தனர் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவல்துறை என்னை எந்த வருடம் எந்த தேதி விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் 24.07.07ம் தேதி எத்தனை மணிக்கு என்று நினைவில் இல்லை, எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் காவல் நிலையத்தில் வைத்து. என்னுடைய வாக்குமூலத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள்.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 523 /2007

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : Sriram | Father/Husband Name | : Natarajan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 02.08.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் தற்சமயம் சென்னையில் வசித்து வருகிறேன், சம்பவத்தின்போது மதுரை பி.பி.குளத்தில் வசித்து வந்தேன். சம்பவத்தின்போது டி.வி.எஸ். ஸ்ரீசக்ரா நிறவனத்தில் உதவி பொதுமேலாளராக பணியிலிருந்தேன். கடந்த 23.07.07ம் தேதி காலை 12.30 மணியளவில் எனது உதவியாளர் வாசுதேவன் என்பவர் போன்மூலம் அன்று சுமார் 11.30 மணியளவில் செக்யூரிட்டி ஆபீசர் திரு.பாண்டியன் என்பவரும், திரு.ரமேஷ் என்பவரும் தன்னிடம் வந்து சுமார் 25 கிலோ எடையுள்ள பித்தளை நிப்பிள்ஸ்-களை ஒரு மூட்டையாக கட்டி கார்த்திக் மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் ஹீரோ ஹோண்டா இருசக்கர வாகனத்தில் முத்துப்பட்டி செல்லும் சாலையில் ரோந்தின்போது பிடிபட்டதாக அவர்கள் தெறிவித்ததாகவும், மேற்படி இரு நபர்களையும் இருசக்கர வாகனம் மற்றும் பொருட்களுடன் செக்யூரிட்டி ஆபீசார்கள் பிடித்து வைத்திருப்பதாகவும் என்னிடம் தகவல் சொன்னார்கள். ஏற்கனவே எங்கள் நிறுவனத்தில் சுமார் 200 கிலோ எடையுள்ள பித்தளை நிப்பிள்ஸ் காணாமல் போய்விட்டதாக தகவல் இருந்ததால் அப்போது மேலூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்து இரு நபர்களையும் பொருட்களுடன் சமர்ப்பிக்குமாறு நான் அறுவுறுத்தினேன். அதன்பேரில் மேலூர் காவல் நிலையத்தில் வாசுதேவன் மற்றும் செக்யூரிட்டிகள் நேரடியாக சென்று புகார் கொடுத்து பிடிபட்ட பொருட்களுடன் போலீசில் ஒப்படைத்தனர். அன்றையதினம் 4 மணியளவில் காவல்நிலையத்தில் ஒப்படைத்தனர். அன்றைய தினம் 5 மணியளவில் சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை:

எனக்கு இந்த சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் தெரியாது, வாசுதேவன், செக்யூரிட்டி ஆபீசர் பாண்டியன் மற்றும் திரு.ரமேஷ் சொல்லி தெரியும். உதவியாளர் வாசுதேவன் பணிபுரிந்த இடத்திற்கும் நான் பணிபுரிந்த இடத்திற்கு உள்ள தூரம் 50 மீட்டர் இருக்கும் என்றால் இருக்கும். வாசுதேவன் போன்மூலம் எனக்கு தகவல் சொன்னார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொன்னோனா என்றால் வாசுதேவன் தகவல் சொன்னதாக சொன்னேன். சம்பவ இடம் எங்கு என்றும், பித்தளை மவுத்துகளை எங்கு வைத்திருக்கிறார்கள் என்று நான் நேரடியாக சென்று பார்த்தேனா என்றால் இல்லை. எங்களுடைய கம்பெணியில் திருடுபோகாததால்தான் உதவி மேலாளராக நான் இருந்தும் நான் ரேநடியாக சென்று பார்க்கவில்லை என்றால் சரியல்ல. இந்த திருட்டானது எங்கள் உயர் அதிகாரிகளின் துணையோடு எங்கள் நிறுவனத்தில் வேலை செய்பவர்கள் சிறிது சிறிதாக ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்றே போலீசார் என்னை விசாரித்தனரா என்றால் விசாரித்தனர் குறிபிட்டு தேதி சொல்லமுடியுமா என்றால் 23.07.07 மாலை 7 மணிக்கு. கம்பெணிக்கு வந்து மீதமுள்ள பித்தளை மவுத்துகளை போலீசார் கைப்பறிறனார்களா என்றால் இல்லை. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 523 /2007

Deposition of witness for: PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | : Pandi | Father/Husband Name | : Shanmugam |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 02.08.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுந்து ஓய்வுபெற்று தற்சமயம் மதுரை தபால் தந்தி நகரில் வசித்து வருகிறேன். கடந்த 23.07.07ம் தேதி பகல் 4 மணியளவில் மேலூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது வெள்ளரிப்பட்டி டி.வி.எஸ். ஸ்ரீசக்ரா கம்பெணியிலிருந்து திரு.வாசுதேவன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரைப்பெற்று நிலைய குற்ற எண். 507-2007 இதச பிரிவு 379-ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். மேற்படி வாதியானவர் முத்துப்பட்டியை சேர்ந்த சுரேஷ் மற்றும் கார்த்திக் ஆகியோருடன் சுமார் 225 கிலோ எடையுள்ள பித்தளை டியூப் மவுத்துகளுடனும், டி.என்.59 எ.டி. 4879 என்ற ஹீரோ ஸ்பிலண்டர் இருசக்கர வாகனத்தையும் ஆஜர் செய்தார்கள். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசல்களை சமூகம் மேலூர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினம் மாலை 5 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மோசஸ் மற்றும் மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்து சாட்சியிடம் கையெழுத்து பெற்றேன். வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் சம்பவ சாட்சிகளான வாசுதேவன், பாண்டியன், ரமேஷ், மோசஸ் மற்றும் மூர்த்தி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து எதிரிகள் இருவரிடமும் வாக்கு மூலம் பதிவு செய்தேன். அதில் சுரேஷ் என்பவரின் வாக்குமூலத்தில்

கார்த்திக், கண்ணன், முருகன், சாஸ்திரி, மணிமாறன், பெரியசாமி ஆகியோர்களுடன் சேர்ந்து அதே கம்பெனியில் திருட்டில் ஈடுபட்டதாக கூறினார். பின்னர் எதிரிகள் இருவரையும் தக்க வழிக்காவல்மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுபபி வைத்தேன். வழக்கு சொத்துக்களான இருசக்கர வாகனம் மற்றும் பித்தளை மவுத்துகளை படிவம் 95-ன்மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இவ்வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு பாலாஜி அவர்களின் பார்வைக்கு வைத்தேன், ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை:

இந்த வழக்கின் 1-வது சாட்சி எழுத்துமூலமாக எந்த புகாரும் என்னிட் கொடுக்கவில்லை என்றாலும், அவரிடம் ஒன்றும் எழுதாத வெற்றுக்காகிதத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டு அ.சா.ஆ.1 தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வரைபடம் பார்வை மகஜர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் தயார் செய்யவில்லை, காவல் நிலையத்தில் கற்பனையாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரில் டி.வி.எஸ். ஸ்ரீசக்ரா முத்திரை எதுவும் இல்லை என்றால் சரிதான். அதில் ஜெனரல் மேலாளரோ, உதவி மேலாளரோ, செக்யூரிட்டி ஆபீசரோ கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் தகவல் அறிக்கையில் சுரேஷ் மற்றும் கார்த்திக் என்பவர்கள்மீதுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மற்றும் சிலர் என்று எழுதவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் சுமார் 250 கிலோ எடையுள்ள பிளாஸ்டிக் டியூபில்உள்ள மவுத்துகள் என்று மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான், பித்தளை மவுத்துகள் என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான் 1-வது சாட்சியை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன் என்றால் சரிதான். நான் அப்பொழுது அவரிடம் எப்படி சரியாக 225 கிலோ என்று ஐய வினா எழுப்பினேனா என்றால் எழுப்பினேன். அதற்குரிய ஆவணங்களை அவர் தந்நதாரா என்றால் தரவில்லை. 1, 2 எதிரிகளை சொன்ன நேரத்தில், இடத்தில் கைது செய்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. எதிரிகள் ஸ்ரீ சக்ரா டயரில் அவர்கள் ஏற்கனவே வேலை செய்ததால் நிரந்தரமாக வேலை வேண்டும் என்று தொழிற்சங்கம் ஆரம்பித்தனர் என்றாலும் அதனை முறியடிக்கவேண்டும் என்பதற்காக ஸ்ரீ சக்ரா டயரிலிருந்து திட்டமிட்டு கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரியல்ல. அதுபோல் இந்த எதிரிகள் வீட்டிலிருக்கும்போது அவர்களை கூட்டிவந்து பொய் வழக்கினை தயார் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி கைது செய்தேன் என்றால் சரியல்ல.

1, 2 எதிரிகள் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை, வாக்குமூலம் கொடுத்தனர். அவர்களுடைய வாக்குமூலம் 161(3) வாக்குமூலம் என்றால் 161 வாக்குமூலம் ஆகும். காவல் நிலையத்தில் என்னிடம் கொடுக்கப்பட்ட புகாரில் பித்தளை மவுத்துகள் மற்றும் அலுமினிய கம்பிகளும் திருடுபோனதாக என்னிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் திருடுபோன பொருட்களை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் நேர்மையான அதிகாரி என்றால் சரிதான், அதனால்தான் இது பொய் வழக்கு என்பதால் நான் மேற்படி விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. டி.வி.எஸ் ஸ்ரீசக்ரா கம்பெணி முழுவதும் இரும்பு கம்பு கோட்டு மிகவும் பாதுகாக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். கம்பெணி முழுவதும் சி.சி.டி.வி போட்டிருந்தார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. ஒவ்வொரு 10 அடிக்கும் ஒரு செக்யூரிட்டி ஆபீசர் இருப்பார்கள் என்றாலும், அவர்களிடம் வயல்லெஸ் கருவி இருக்கும் என்றாலும் அதுபற்றி தெரியாது. இந்த வரைபடத்தில் அந்த கம்பெணியை சுற்றி இரும்பு வேலிகள் போட்டு அடைக்கப்பட்டிருப்பதாக காட்டவில்லை என்றால் சரிதான். மின்கம்பங்கள் அதற்கான விளக்குகள் இருப்பதையும் காட்டவில்லை என்றால் சரிதான். இவைகளை குறிப்பிட்டால் வழக்கு பாதிப்பாக இருக்கும் என்பதால் காட்டவில்லை. இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நேர் எதிரிலேயே மெயின் அலுவலகமும், செக்யூரிட்டி அலுவலகமும் உள்ளது என்றால் சரிதான். வழக்கின் சம்பவ இடம் கழிவுகளின் குடோனிற்கு வெளியே தென்புறம் என்றால் சரிதான். ஸ்கிராப் குடோனுக்குள் திருடுபோனதாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தவறுதலாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகளிடமிருந்து மோட்டார் சைக்கிளை ஸ்ரீ சக்கரா நிறுவனத்தினர் என்னிடம் ஒப்படைத்தனர் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1-வது சாட்சியிடமிருந்து மோட்டார் சைக்கிளை நான் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். படிவம் 95ல் சாட்சி என்ற காலத்தில் நான் யாரிடமும் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். நிலையத்திலிருந்து அனுப்பும்போது அது தேவையில்லை. படிவம் 95-ல் வண்டியின் பதிவெண் காட்டப்படவில்லை என்றால் சரிதான். திட்டமிட்டு போடப்பட்ட பொய் வழக்கு என்பதால் வண்டியின் பதிவெண்ணைக்கூட எழுதாமல் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகளை வாகனத்துடன் என்னிடம் ஆஜர்படுத்துவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.